RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 146 | ஜூன்.1, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது: ஜெய்சங்கர் பேச்சு

புதுடெல்லி: ஜூன்.1-

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா அடிபணியாது என்றும், பயங்கரவாதத்திற்கு கடுமையாக பதிலடி கொடுக்கப்படும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.



குஜராத்தின் வதோதராவில் நடந்த ஒரு நிகழ்வில் பேசிய அமைச்சர் ஜெய்சங்கர், “ஏப்ரல் 22 நடத்தப்பட்ட பஹல்காம் பயங்கரவாத தாக்குதல், ஜம்மு காஷ்மீரின் சுற்றுலாவை சேதப்படுத்துவதையும், மத பதற்றத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட தீய வடிவமைப்பாக இருந்தது. இந்த காட்டுமிராண்டித்தனத்திற்கு ஒரு முன்மாதிரியான பதில் தேவைப்பட்டது. இது பாகிஸ்தானில் பஹாவல்பூர் மற்றும் முரிட்கே உள்ளிட்ட இடங்களில் உள்ள பயங்கரவாத கட்டளை மையங்களை அழிப்பதன் மூலம் வழங்கப்பட்டது.

பயங்கரவாதத்தை தங்கள் நோக்கங்களுக்காக ஆதரிப்பவர்கள், வளர்ப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் அதிக விலை கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. நாங்கள் ஒருபோதும் அணு ஆயுத மிரட்டலுக்கு அடிபணிய மாட்டோம். இந்தியாவின் தேசிய நலனுக்காகவே எந்த முடிவுகளும் எடுக்கப்படுகின்றன, அதுவே தொடர்ந்து எடுக்கப்படும். பயங்கரவாதத்திற்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை குறித்து மற்ற நாடுகளிடமிருந்து புரிதலைக் கண்டது மகிழ்ச்சியளிக்கிறது.

நமது வளங்கள் குறைவாக இருக்கலாம், ஆனால் இந்தியா பரந்த மனப்பான்மையைக் கொண்டுள்ளது. உலக நாடுகள் தங்களுக்கு இடையே கலாச்சாரம் மற்றும் மரபுகளுக்கு அதிக மரியாதை அளிக்க வேண்டும். சுமார் 200 நாடுகளைக் கொண்ட சர்வதேச சமூகத்தில், நமக்கு தேசிய நலன் உள்ளது. இயற்கையாகவே அவற்றை முன்னேற்ற முயல்கிறோம். ஆனால் இது பரஸ்பர புரிதல் மற்றும் பரஸ்பர நன்மையை வழிகாட்டும் கொள்கைகளை கொண்டு செய்யப்பட வேண்டும்“ என்று அவர் விளக்கினார்.

## ‘ஆபரேஷன் சிந்தூரில் பிஎஸ்எஃப் வீராங்கனைகளின் வீரம் தனித்துவமானது’ பிரதமர் மோடி புகழாரம்

போபால்: ஜூன்.1-

‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையின் போது எல்லைப் பாதுகாப்புப் படையின் "துணிச்சலான மகள்கள்" தனித்துவமான வீரத்தை வெளிப்படுத்தினர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



போபாலில் நடந்த லோகமாதா தேவி அஹில்யாபாய் பெண் சக்தி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, “சக்தி வழிபாட்டின் போது, நாம் குங்குமம் வழங்குகிறோம். இது இன்று இந்தியாவின் வீரத்தின் அடையாளமாக மாறியுள்ளது. பஹல்காமில், பயங்கரவாதிகள் இந்தியர்களின் உயிர்களை மட்டும் பறிக்கவில்லை. நமது கலாச்சாரத்தையும் தாக்கினர். நமது சமூகத்தை பிளவுபடுத்த முயன்றனர்.

மேலும், இந்த பயங்கரவாதிகள் இந்தியாவின் பெண் சக்திக்கு சவால் விடுத்தனர். அது இப்போது பயங்கரவாதிகளையும், அவர்களைக் கையாளுபவர்களையும் திருப்பி தாக்கி உள்ளது. ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் வெற்றிகரமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையாகும். பாகிஸ்தான் ராணுவம் நினைத்துக்கூட பார்க்காத பயங்கரவாதிகளின் மறைவிடங்களை நமது படைகள் அழித்தன. பயங்கரவாதத்தின் மூலம் மறைமுகப் போர்களை இனி பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை இந்த நடவடிக்கை தெளிவாக உணர்த்திவிட்டது. இப்போது, நாம் எதிரி நாட்டுக்குள்ளும் தாக்குவோம். பயங்கரவாதிகளை ஆதரிப்பவர்களையும் அதிக விலை கொடுக்கச் செய்வோம்.

எதிரி தோட்டாக்களை வீசினால், குண்டுகள் மூலம் பதிலடி கொடுக்க தயாராக இருங்கள் என்று இப்போது 140 கோடி இந்தியர்களும் கூறுகிறார்கள். ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் 'பெண் சக்தி'யின் அடையாளமாகவும் மாறி விட்டது. இந்த நடவடிக்கையில் எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எஃப்) பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஜம்மு முதல் பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் குஜராத் எல்லை வரை பிஎஸ்எஃப் மகள்கள் முன்னணியில் இருந்தனர். எல்லை தாண்டிய துப்பாக்கிச் சூட்டுக்கு வலுவான பதிலடி கொடுத்தனர். கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் முதல் எதிரி நிலைகளை அழிப்பது வரை, பிஎஸ்எஃப்ன் துணிச்சலான மகள்கள் தனித்துவமான வீரத்தை வெளிப்படுத்தினர்.

பள்ளிகள் முதல் போர்க்களங்கள் வரை, இன்று நாடு தனது மகள்களின் துணிச்சலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நம்பிக்கை கொண்டுள்ளது. முதல் முறையாக, சைனிக் பள்ளிகளின் கதவுகள் பெண்களுக்காக திறக்கப்பட்டுள்ளன. 2014 க்கு முன்பு, ழிசிசி கேடட்களில் 25% மட்டுமே பெண்களாக இருந்தனர், ஆனால் இப்போது அந்த எண்ணிக்கை 50% ஐ நோக்கி செல்கிறது. பெண் கேடட்களின் முதல் தொகுதி தேசிய பாதுகாப்பு அகாடமியில் (ழிஞிகி) தேர்ச்சி பெற்றுள்ளது.

இன்று, ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் முன்னணி நிலைகளில் பெண்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். போர் விமானங்களை ஓட்டுவது முதல் மிழிஷி விக்ராந்தில் பணியாற்றுவது வரை, பெண் அதிகாரிகள் சிறந்த துணிச்சலை வெளிப்படுத்துகிறார்கள்.

பெண்கள் அதிகாரமளிப்பதற்கான முன்முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. புதிய தொழில்நுட்பங்களிலிருந்து பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று, நமது பெண்கள் நவீன தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

விவசாயத்தில், ஒரு ட்ரோன் புரட்சி நிகழ்ந்து வருகிறது. நமோ ட்ரோன் சகோதரி முயற்சியின் மூலம், கிராமப்புற பெண்களின் நம்பிக்கையும் வருமானமும் அதிகரித்து வருகிறது. இன்று, நமது மகள்களில் ஏராளமானோர் மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளாக மாறி வருகின்றனர். நமது அனைத்து முக்கிய விண்வெளி பயணங்களிலும், நமது சகோதரிகள் விஞ்ஞானிகளாக பணியாற்றுகின்றனர். சந்திரயான்3 பயணத்தில், 100க்கும் மேற்பட்ட பெண் விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்," என்று தெரிவித்தார்.

## ‘தமிழகத்தில் 38 பேருக்கு கரோனா பாதிப்பு; பதற்றம் தேவையில்லை’ அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை: ஜூன்.1-

“தமிழகத்தில் 38 பேருக்கு கரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கரோனா வைரஸின் ஒமிக்ரான் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது; ஆனால், இது குறித்து மக்கள் பதற்றம் அடையத் தேவையில்லை. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் மட்டும் முகக்கவசம் அணிந்து கொள்ளலாம். மற்றபடி வதந்திகளைப் பரப்ப வேண்டாம்.” என்று கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கை குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று (மே.31) செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர், “தமிழகத்தில் 38 பேருக்கு கரோனா தொற்று உள்ளது. கரோனா வைரஸின் ஒமிக்ரான் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது. ஆனால், இது பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. எனவே, மக்கள் இது குறித்து பதற்றம் அடையத் தேவையில்லை. புனே ஆய்வு மையத்துக்கு, தமிழகத்திலிருந்து 17 மாதிரிகள் சோதனைக்கு அனுப்பியுள்ளோம்.

மத்திய சுகாதார அமைச்சகம், முகக் கவசம் அணிவது நல்லது என்று தெரிவித்துள்ளது. அதையேத்தான் நாங்களும் வலியுறுத்துகிறோம். முகக்கவசம் அணிவது நல்லதே தவிர, எதுவுமே கட்டாயம் கிடையாது. அதுவும், எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளோர் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது நல்லது.

தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு, படுக்கை வசதிகள், ஆக்சிஜன் வசதி என எல்லாமே சிறப்பாக உள்ளது. மாவட்ட, தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் எல்லா வசதிகளும் சரியாக உள்ளது.

இந்தச் சூழலில் கரோனா பரவல் பற்றிய வதந்திதகளை யாரும் பரப்பாதீர்கள். வதந்திதான் பெரிய நோய். சென்னை அரசு மருத்துவமனையில் முதியவர் ஒரு இறந்ததற்கு கரோனா காரணம் அல்ல. அவருக்கு கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோய் இருந்தது. ஏற்கெனவே இருந்த அந்த இணை நோய் பாதிப்பாலேயே அவர் உயிரிழந்தார்.

கரோனா தொற்றைப் பொருத்தவரையில், மத்திய அரசு வழிகாட்டுதல்களை எப்போதும் நாம் பின்பற்றுகிறோம். ஒருவேளை விமான நிலையத்தில் கண்காணிப்பை தீவிரப்படுத்தச் சொன்னால், உடனடியாக அங்கே கண்காணிப்புக் குழு அமைப்போம். இப்போதைக்கு பதற்றப்படத் தேவையில்லை.

அதேபோல், தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள்ளேயே இருக்கிறது. பருவமழைக் காலம் என்பதால் காய்ச்சல் முகாம்களும் நடத்துகிறோம்.” என்றார்.

## தமிழகத்துக்கான என் குரல் மாநிலங்களவையில் ஒலிக்கும்: கமல்ஹாசன் தகவல்

சென்னை: ஜூன்.1-

முதல்வர் மு.க.ஸ்டாலினை மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் நேற்று சந்தித்து, மாநிலங்களவைத் தேர்தலில் மநீமக்கு இடம் ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்தார்.



தமிழகத்தில் 6 மாநிலங்களவை எம்.பி.க்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் ஜூன் 19ம் தேதி நடைபெற உள்ளது. திமுக கூட்டணிக்கு 4 இடங்கள் கிடைக்கக்கூடிய நிலையில் 3 இடங்கள் திமுகவுக்கும் ஒரு இடம் கூட்டணி கட்சியான மக்கள் நீதி மய்யம் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மாநிலங்களவைத் தேர்தலில் மநீம வேட்பாளராக கட்சியின் தலைவர் கமல்ஹாசன் போட்டியிடுவார் என அக்கட்சியின் நிர்வாகக்குழு செயற்குழு கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

இந்நிலையில் மநீம தலைவர் கமல்ஹாசன், அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலினை நேற்று காலை சந்தித்தார். அப்போது மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட மநீம கட்சிக்கு இடம் ஒதுக்கியதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்த சந்திப்பின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, திமுக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித்தொடர்பாளர் டிகேஎஸ் இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோரும், மநீம கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம், துணை தலைவர்கள் ஏ.ஜி.மவுரியா, தங்கவேல், மாநிலச் செயலாளர்கள் முரளி அப்பாஸ், மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

முதல்வரை சந்தித்த பிறகு கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறு முதல்வர் சொன்னார். அதேபோல், திமுக மூத்த நிர்வாகிகள் தங்கள் அறிவுரைகளையும் அனுபவங்களையும் எங்களிடம் கூறினார்கள். வேட்புமனு தாக்கல் எப்போது தாக்கல் செய்யலாம் என்பது குறித்து அவர்களிடம் கலந்தாலோசிக்கப்படும்.

நான் எப்போதுமே தமிழகத்துக்காகப் பேசிக்கொண்டிருக்கிறேன். தற்போது தமிழகத்துக்கான என் குரல் மாநிலங்களவையில் முதல் முறையாக ஒலிக்கப்போகிறது அவ்வளவுதான். ஆரம்பத்தில் திமுகவை எதிர்த்த நீங்கள் இப்போது இணைந்து செயல்படுகிறீர்களே என்று கேட்கிறீர்கள். நாட்டுக்கு தேவை என்பதால் திமுகவுடன் இணைந்து செயல்படுகிறேன்.

கன்னட மொழி தொடர்பாக நான் தெரிவித்த கருத்தால் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும், நான் மன்னிப்பு கேட்காவிட்டால் எனது படத்துக்கு தடை விதிக்கப்படும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பது குறித்தும் கேட்கிறீர்கள். இதற்கு முன்பும் இதுபோன்று நான் மிரட்டப்பட்டிருக்கிறேன்.

சட்டம், நியாயத்தை நம்புகிறேன்: எனது கருத்து தவறாக இருந்தால் நான் மன்னிப்பு கேட்பேன். தவறாக இல்லாவிட்டால் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். இது எனது வாழ்வியல் முறை. இது ஜனநாயக நாடு. நான் சட்டத்தையும் நியாயத்தையும் நம்புகிறேன். எப்போதும் அன்புதான் வெற்றிபெறும். கன்னடம் மீதும், தெலுங்கு மீதும், கேரளம் மீதும் நான் வைத்திருக்கும் அன்பு உண்மையானது. ஏதோ ஒரு மறைமுக செயல்திட்டத்தோடு செயல்படுபவர்களைத் தவிர வேறு யாரும் என்னை சந்தேகிக்க மாட்டார்கள். இவ்வாறு கமல்ஹாசன் கூறினார்.



## கோரிப்பாளையம் மேம்பால கட்டுமானப் பணிகள் குறித்து அமைச்சர் எ.வ.வேலு நேரடியாக ஆய்வு

மதுரை, ஜூன்.1-

மதுரையில் பொதுப்பணித்துறை சார்பாக ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோரிப்பாளையம் மேம்பால கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மதுரை மாநகரில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் விதமாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.10.2023 அன்று கோரிப்பாளையம் மற்றும் அப்பல்லோ சந்திப்பு மேம்பாலங்கள் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. இக்கட்டுமான பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கோரிப்பாளைம் மேம்பால கட்டுமானப் பணிகளை இன்றைய தினம் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு மேற்கொண்டார். கட்டுமானப் பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் நிறைவேற்றி இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்திட வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை தலைமைப்பொறியாளர் சத்யபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அதிகாரி சந்திரசேகர், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ் மற்றும் கோட்டப் பொறியாளர் மோகனகாந்தி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆட்டோ மீட்டர் கட்டணம் குறித்து தலைமைச் செயலர் ஆலோசனை: அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை: ஜூன்.1-

ஆட்டோ மீட்டர் கட்டணம் குறித்து தலைமைச் செயலர் ஆலோசித்து வருவதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013ம் ஆண்டு ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தை தமிழக அரசு மாற்றி அமைத்தது. அதன்பின் தனிநபர் ஒருவர் தொடர்ந்த பொதுநல வழக்கை விசாரித்த நீதின்றம், மீட்டர் கட்டணத்தை மாற்றி அமைக்குமாறு 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து பல கட்ட பேச்சுவார்த்தையை நடத்திய அரசு, 2 ஆண்டுகளைக் கடந்த பிறகும் கட்டணத்தை உயர்த்தவில்லை. இதற்கிடையே, இதுதொடர்பாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஆட்டோ ஓட்டுநர்களுடன் போக்குவரத்துத் துறை ஆலோசனை நடத்தி, கட்டணம் தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றது. ஆனால், கட்டணம் இறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக தீவிர போராட்டங்களை ஓட்டுநர் சங்கங்கள் முன்னெடுத்தன. இதற்கிடையே, சென்னை, பசுமை வழிச்சாலையில் உள்ள போக்குவரத்துத் துறை அமைச்சரின் இல்லத்தில் அமைச்சர் சிவசங்கரை, தமிழ்நாடு ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் அ.ஜாஹிர் ஹுசைன், பொதுச்செயலாளர் ஆர்.வெற்றிவேல் ஆகியோர் சந்தித்து தொழிலாளர்களின் கோரிக்கையை முன்வைத்தனர்.

அப்போது, “மினி பேருந்து குறித்த இறுதிக்கட்ட பணிகளில் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் இருப்பதால், ஆட்டோ ஓட்டுநர்களின் கோரிக்கைகள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். ஆட்டோ மீட்டர் கட்டணம் தலைமைச் செயலாளரின் ஆலோசனையில் உள்ளது. மீட்டர் கட்டணம் கூடிய விரைவில் மாற்றப்படும்“ என அமைச்சர் கூறியதாக, தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.



# இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்: மாணவர்களுக்கு விஜய் அறிவுரை

மாமல்லபுரம், ஜூன்.01-

உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும் என்று பள்ளி மாணவர்களுக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அறிவுரை வழங்கியுள்ளார். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 10, பிளஸ் 2 வகுப்புகளில் தொகுதி வாரியாக சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கல்வி விருது வழங்கும் விழா, மாமல்லபுரம் அருகே தனியார் சொகுசு விடுதியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விஜய் பேசியதாவது: கல்வியில் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நீட் தேர்வு மட்டும் உலகம் அல்ல. நீட்டை தாண்டிய இந்த உலகம் ரொம்ப பெரியது. அதில், நீங்கள் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. அதனால், உங்களின் மனநிலையை மிகவும் தைரியமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகம் என்ற ஒன்று இருந்ததால்தான், இந்த உலகம் சுதந்திரமாக இருக்க முடியும்.

பணம் கொடுத்து வாக்கு வாங்கி வெற்றி பெற்று விடலாம் என நினைப்பவர்களின் செயலை ஊக்கப்படுத்த வேண்டாம். பணம் வாங்காதீர்கள், உங்களின் பெற்றோரையும் வாங்க வேண்டாம் எனக் கூறுங்கள். அதைப் பின்பற்றுங்கள். ஆனால், அடுத்த ஆண்டு பாருங்கள் வண்டி, வண்டியாக கொண்டு வந்து கொட்டுவார்கள். அத்தனையும் உங்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம்தான். நல்லவர்கள், நம்பிக்கையானவர்கள், இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு பெற்றோர் மிகவும் அழுத்தம் கொடுக்க வேண்டாம். அவர்களுக்கு பிடித்த துறைகளில் சாதித்து காட்டுவார்கள். அதேபோல், சாதி, மதத்தை வைத்து பிரிவினை வளர்க்கும் சிந்தனை பக்கம் செல்லாதீர்கள். விவசாயிகள், தொழிலாளர்கள் சாதி, மதம் பார்த்து பொருட்களை உற்பத்தி செய்யவில்லை. அவற்றை போதை பொருட்களைப் போல ஒதுக்குவதுதான் நல்லது. உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், பிளஸ் 2 வகுப்பில் தமிழக அளவில் 599 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த மாணவி ஓவியா அஞ்சலி மற்றும் 10ம் வகுப்பில் 499 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த சோபியா ஆகியோருக்கு வைரத்தோடு மற்றும் பாராட்டு சான்றினை விஜய் வழங்கினார். பின்னர், 88 தொகுதிகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற 676 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ். காசோலைகளை வழங்கி பாராட்டினார்.இந்நிகழ்ச்சியில், அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா மற்றும் மாணவ, மாணவிகள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தோழர் ப.சண்முகம் நினைவஞ்சலி பொதுக்கூட்டம்: எம்.சின்னதுரை எம்எல்ஏ பங்கேற்பு

புதுக்கோட்டை, ஜூன்.01-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர், முன்னாள் மாநிலக்குழு உறுப்பினர், சிஐடியு முன்னாள் மாவட்டத் தலைவர் தோழர் ப.சண்முகம் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி பொதுக்கூட்டம் சிஐடியு தொழிற் சங்கம் சார்பில் வெள்ளிக்கிழமை புதுக்கோட்டையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை காமராஜபுரத்தில் நடைபெற்ற புகழஞ்சலி பொதுக்கூட்டத்திற்கு இந்திய தொழிற்சங்க மையம் (சிஐடியு) புதுக்கோட்டை மாநகர ஒருங்கிணைப்பாளர் எம்.ஏ.ரகுமான் தலைமை வகித்தார். தோழர் ப.சண்முகத்தின் உருவப் படத்தை கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பி னரும், சிபிஎம் மாநிலக்குழு உறுப்பினருமான எம்.சின்னதுரை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்;. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் ப.சண்முகம் அவர்களின் தியாக வாழ்வை நினைவுகூர்ந்து உரையாற்றினார்.

சிஐடியு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க மத்தியக்குழு உறுப்பினர் மலைவிளைப்பாசி, சிஐடியு மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா, மாநிலக்குழு உறுப்பினர் பி.சத்தியநாராயணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பாலசுப்பிரமணியன் மற்றும் நிர்வாகிகள் சி.மாரிக்கண்ணு, ஆர்.மணிமாறன், கே.நடராஜன், க.ரெத்தினவேலு, ஏ.முகமதுகனி ஆகியோர் பேசினர்.

முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் முகமது சேட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே.சண்முகம், சு.மதியழகன், கி.ஜெயபாலன், மாநகரச் செயலாளர் எஸ்.பாண்டியன், ப.சண்முகம் மகன் ஸ்டாலின், சமூக ஆர்வலர்கள் மணிகண்டன், பீர்முகமது உள்ளிட்டோரும் புகழஞ்சலி உரை நிகழ்த்தினர்.

முன்னதாக சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் ஆர்.வீராச்சாமி வரவேற்க, மாவட்ட துணைச் செயலாளர் மு.வெ.சரவணன் நன்றி கூறினார். நிகழ்வில் தோழர் ப.சண்முகம் குடும்பத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் அடுத்த 6 நாட்களுக்கு மழை வாய்ப்பு

சென்னை, ஜூன்.01-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நாளை (ஜூன் 1) முதல் ஜூன் 6ம் தேதி வரை, அடுத்த 6 நாட்களுக்கு தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு பருவமழை மேற்கு தொடர்ச்சி மாவட்டங்களில் தீவிரமாக உள்ளது. நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அநேக இடங்களிலும் மழை பெய்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நாளை (ஜூன் 1) முதல் ஜூன் 6ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், ( ஜூன் 1) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3738 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2728 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப்பகுதிகளில், இன்று (மே 31) மற்றும் நாளை (ஜூன் 1) தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், வடதமிழகத்திற்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 2 முதல் ஜூன் 4ம் தேதி வரை, தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகளில், மத்திய தெற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் வடகிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள், ஆந்திரா கடலோர பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 1ம் தேதி, மத்திய தெற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் வடகிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகள் மற்றும் ஆந்திரா கடலோர பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 2 மற்றும் ஜூன் 3ம் தேதி வரை, மத்திய வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு வங்கக்கடலின் ஒருசில பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும், வீசக்கூடும்.

ஜூன் 4ம் தேதி, மத்திய வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும், வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளில், மற்றும் (ஜூன் 1) தென்மேற்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு அரபிக்கடல், வடகிழக்கு அரபிக்கடலின் ஒருசில பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும்,தெற்கு அரபிக்கடல், மத்திய அரபிக்கடலின் தெற்கு பகுதிகள், கர்நாடககேரள கடலோரப்பகுதிகள், மாலத்தீவு மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 2ம் தேதி, தென்மேற்கு அரபிக்கடல் மற்றும் மத்தியமேற்கு அரபிக்கடல், வடகிழக்கு அரபிக்கடலின் ஒருசில பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், தெற்கு, மத்திய மற்றும் வடக்கிழக்கு அரபிக்கடலின் தெற்கு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 3 மற்றும் ஜூன் 4ம் தேதி வரை, தென்மேற்கு அரபிக்கடல் மற்றும் மத்தியமேற்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையி டையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், தெற்கு அரபிக்கடலின் ஒருசில பகுதிகள், மத்திய அரபிக்கடலின் ஒருசில பகுதிகள், வடக்கிழக்கு அரபிக்கடலின் தெற்கு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே, மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

# மெஷினில் நாற்று நடவு செய்தால் ரூ.4 ஆயிரம் மானியம்: வேளாண் அதிகாரிகள் தகவல்

அணைக்கட்டு, ஜூன்.01-

மெஷின் மூலம் நெல் நாற்று நடவு செய்தால் ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.வேலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் நெல் பயிரிட்டு வருகின்றனர்.

அறுவடைக்கு மெஷின் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நாற்று நடுவதற்கு ஆட்கள் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, தற்போது வேளாண்மை பொறியியல் துறை மூலம் நெல் நடவு மெஷின்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், வெளியில் மெஷின்களை வாடகைக்கு எடுத்து நெல் நாற்று நடவு செய்தால் ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது.



இந்நிலையில், அணைக்கட்டு அடுத்த ஏரிப்புதூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி நெல் நடவு மெஷினை வெளியில் வாடகைக்கு எடுத்து வந்து நிலத்தில் மெஷின் மூலம் நடவு பணியில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு குறுவை சாகுபடி திட்டத்தில் ரூ.4 ஆயிரம் மானியம் வழங்குவதற்கு அணைக்கட்டு வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார், துணை வேளாண்மை அலுவலர் புனித்ராஜ், உதவி வேளாண்மை அலுவலர் காயத்ரி மற்றும் வேளாண் துறையினர் நேற்று ஆய்வு செய்தனர். மேலும், நாற்று நடும் மெஷின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அப்போது, ஊராட்சி மன்ற தலைவர் கீதா வெங்கடேசன், ஒன்றிய திமுக செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இதுகுறித்து வட்டார வேளாண்மை அலுவலர்கள் கூறுகையில், மெஷின்கள் மூலம் குறைந்த நேரத்தில் நெல் நடவு பணியை முடித்துவிடலாம். மெஷின் மூலம் நடவு பணியை மேற்கொண்டால் நாற்றுகள் இடையே சரியான இடைவெளி இருக்கும். களை எடுக்கும்போது எந்தவித பாதிப்பும் ஏற்படாது. கூடுதலான விளைச்சல் இருக்கும். மெஷின்களை வெளியில் வாடகைக்கு எடுத்து நடவு பணியில் ஈடுபட்டால் ஒரு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும் என்றனர்.

# சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒக்கூர் பகுதியிலுள்ள சருகனியாற்றின் கரையோரங்களில் மரக்கன்றுகள் நடும் பணியினை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தொடங்கி வைத்தார்

சிவகங்கை, ஜூன்.01-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒக்கூர் பகுதியிலுள்ள சருகனியாற்றின் கரையோரங்களில் மரக்கன்றுகள் நடும் பணியினை கடந்த மாவட்ட ஆசியர் ஆஷா அஜித், தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் நீர்வள ஆதாரங்களை சீரமைத்து நிலத்தடி நீரை மேம்படுத்திடும் பொருட்டு, தமிழகம் முழுவதும் நீர்நிலைகளை பாதுகாத்திட துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அதனடிப்படையில் சிவகங்கை மாவட்டத்தில், மழைக்காலங்களில் பெறப்படும் தண்ணீரை வீணாக்காமல் சேமிப்பதற்கு ஏதுவாகவும் வரத்துவாய்கால், கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகளை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைந்திருக்கும் செடிகளை அகற்றுதல், நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றுதல் போன்ற பல்வேறுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அரசுடன் இணைந்து நீர்நிலைகளை பாதுகாத்திட ஊர் பொதுமக்கள், தனியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளித்து, எதிர்கால சந்ததியினருக்கு பயனுள்ள வகையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நீர்நிலைகளை சீரமைக்கும் சிறப்பான பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.





அதன்படி, கடந்த 16.09.2024 அன்று சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட அலவாக்கோட்டை கிராமத்தில், அலவாக்கோட்டை கண்மாய் உபரி நீரிலிருந்து உருவாகி நாமனூர், பெருங்குடி, ஒக்கூர், நகரம்பட்டி மற்றும் பாகனேரி வழியாக செல்லும் சருகனி ஆற்றினை தூர்வாரும் பணியானது அரசுடன் இணைந்து சேதுபாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி நிறுவனர் மற்றும் இயற்கையை பாதுகாக்கும் தன்னார்வ லர்களின் பங்களிப்புடன் சீரமைப்பு பணிகள் சிறப்பாக தொடங்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகளைத் தொடர்ந்து, இன்றையதினம் ஒக்கூர் ஊராட்சிக்குட்பட்ட வீழனேரி பகுதியிலுள்ள ஒக்கூர் சருகனியாற்று கரையோரங்களில் சுமார் 1,000 மரக்கன்றுகள் நடும் பணியும் மேற்கண்ட தனியார் பங்களிப்புடன் தொடங்கப்பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை ககள் மட்டுமன்றி, பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையிலும், உறுதுணையாக இருந்திடும் வகையிலும், மேற்கண்ட நன்கொடையாளர்கள் நீர்நிலைகளை பாதுகாத்திட முன்வந்துள்ளது பாராட்டுக்குரியதாகும். இதேபோன்று, மாவட்டத்தில் பாலாறு மற்றும் விருசூழியாற்று பகுதிகளிலும் சீரமைப்பு பணிகள் தொடங்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேலும், சருகனியாறு சீரமைப்பு பணியின்போது, பல்வேறு நீர்பாசன கால்வாய்கள் கண்டறியப்பட்டு, சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, ஆற்றின் வழித்தட பகுதிகளிலுள்ள விவசாயிகள் பெருமளவில் பயனடைவர்.

சிவகங்கை மாவட்டத்தினை பசுமை நிறைந்த செழிப்பான மாவட்டமாக உருவாக்கிடும் பொருட்டு, நீர்நிலை சீரமைப்பு பணிகளுடன் ஆற்றின் கரையோரங்களில் மரக்கன்றுகள் நடும் பணியும் நடைபெற்று வருகிறது. முன்னதாக, மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களை மீட்டெடுத்து தனியார் பங்களிப்புடன் பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இதன் வாயிலாக சிறு காடுகள் போன்ற அமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம், வனவிலங்களிடமிருந்து விவசாயித்தினையும் பாதுகாத்திட முடியும்.

இன்றையதினம் தொடங்கப் பட்டுள்ள மரக்கன்றுகள் நடும் பணிக்கு உறுதுணையாக இருந்து, தங்களது பங்களிப்பினையும் ஏற்படுத்திடும் பொருட்டு, இந்தோ திபேத் எல்லை காவல் படையினர் (ITBP) மற்றும் சேதுபாஸ்கரா கல்லூரி மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளது பாராட்டிற்குரியதாகும்.

இதுபோன்று பல்வேறு பகுதிகளில் நடப்படும் மரக்கன்றுகளை முறையாக பராமரித்து பேணிக்காப்பது நாம் ஒவ்வொருவரின் கடமையாகும். இவ்வாறாக மரக்கன்றுகள் நடும் பணி நம் எதிர்கால சந்ததியினர்களுக்கான வளமான மற்றும் சுகாதாரமான சமுதாயகத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைகிறது.

மேலும், நீர்நிலை பாதுகாப்பு மற்றும் பசுமை நிறைந்த மாவட்டத்தினை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்து செயலாற்றி வரும் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நீர்வளத்துறை, வேளாண் பொறியியல் துறை, பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் ஆகியோர்களுக்கு எனது பாராட்டுக்களை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்று, பல்வேறு தனியார் தொண்டு நிறுவனங்கள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கும் பசுமை நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும் தங்களது பங்களிப்பினை ஏற்படுத்தி, சிவகங்கை மாவட்டத்தினை வளமான மாவட்டமாக உருவாக்குவதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி , மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமையின் திட்ட இயக்குநர் கா.வானதி , சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர்கள் முத்துராமலிங்கம், முருகன், சேதுபாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி நிறுவனர் சேதுகுமணன்,

கருப்பையா ராமாயி அறக்கட்டளை அறங்காவலர் ரிஸி.மணிகண்டன், ஒக்கூர் சேக்கப்ப செட்டியார், நீர் நிலம் பாதுகாப்பு இயக்கத் தலைவர் கிருஷ்ணன், வட்டாட்சியர்கள் சிவராமன், தங்கமணி (பேரிடர் மேலாண்மை) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ காரைக்குடி புனித ஜோசப் கல்வியியல் கல்லூரியின் பத்தாம் ஆண்டு பட்டமளிப்பு விழா, கல்லூரியின் கருத்தரங்க அறையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக கல்லூரி முதல்வர் தனுஷ்கோடி வரவேற்று பேசினார். இவ்விழாவில் கல்லூரி தலைவர் வி. ஜோசப் தலைமை தாங்கினார் அழகப்பா பல்கலைக்கழக தொலைதூர மற்றும் ஆன்லைன் கல்வி மைய இயக்குனர் பேராசிரியர் முனைவர் கண்ணபிரான் கலந்து கொண்டு பட்டமும், கேடயமும் வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் 90க்கு மேற்பட்ட கல்வியல் கல்லூரி மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. விழாவில் கல்லூரி துணைத் தலைவர் மைக்கேல் டிரஸ்ட் உறுப்பினர் திருமதி பிலோமினாள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை புனித ஜோசப் கல்வியல் கல்லூரி வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.





# முன்கூட்டியே துவங்கிய தென்மேற்கு பருவமழையால் சுற்றுலா பயணிகள் வருகை குறைவு

ஊட்டி, ஜூன்.01-

மலைகளின் அரசி என வர்ணிக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், பச்சைநிற கம்பளம் விரித்தது போல் காட்சியளிக்கும் புல்வெளிகள், வனப்பகுதிகள், எங்கு பார்த்தாலும் பசுமையாக காட்சியளிக்கும் தேயிலை தோட்டங்கள், நீர் வீழ்ச்சிகள், அணைகள் மற்றும் காய்கறி தோட்டங்கள் உள்ளன. இங்கு ஆண்டு முழுவதும் நிலவக்கூடிய இதமான காலநிலையை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் நீலகிரிக்கு வருகை புரிகின்றனர்.

ஆண்டுக்கு சுமார் 30 லட்சம் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக கோடை சீசன் சமயமான ஏப்ரல், மே மாதங்களில் சமவெளி பகுதிகள், அண்டை மாநிலங்களில் கொளுத்தும் கொடை வெயிலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இச்சமயங்களில் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டியை நோக்கி படையெடுப்பார்கள்.

லட்சக்கணக்கில் குவியும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் நோக்கில் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, படகு போட்டி, பழக்கண்காட்சி உள்ளிட்ட கோடை விழா நிகழ்ச்சிகள் மே மாதத்தில் நடத்தப்படுகிறது. இதுதவிர தனியார் சார்பில் நாய் கண்காட்சி உள்ளிட்டவைகளும் நடத்தப்படுகின்றன. ஊட்டி வர கூடிய சுற்றுலா பயணிகள் தங்கிச்செல்ல வசதியாக நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் நட்சத்திர ஓட்டல்கள், லாட்ஜ்கள், காட்டேஜ்கள் ஏராளமானவை உள்ளன.

இதுமட்டுமின்றி சாலையோர வியாபாரிகள், வாடகை வாகன ஓட்டுநர்கள், உணவகங்கள், உள்ளூர் தயாரிப்புகளான நீலகிரி தைலம், வர்க்கி, சாக்லேட் உள்ளிட்டவைகள் விற்பனை செய்யும் கடைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமானோருக்கு சுற்றுலா தொழிலேயே வாழ்வாதாரமாக உள்ளது. குறிப்பாக கோடை சீசன் காலமான ஏப்ரல், மே மாதங்களில் சுற்றுலா தொழிலில் ஈட்டும் வருவாயை கொண்டு உள்ளூர் மக்கள் ஆண்டு முழுவதும் பிழைப்பு நடத்துகின்றனர்.

இதனால் முன்கூட்டியே கோடை சீசனுக்காக பொருட்களை வாங்கி இருப்பு வைத்து விற்பனை செய்து வருவாய் ஈட்டுவார்கள். இதனால் ஒவ்வொரு ஆண்டும் கோடை சீசனை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். இந்த சூழலில் உயர்நீதிமன்ற உத்தரவு படி ஏப்ரல் 1ம் தேதி முதல் கடைபிடிக்கப்படும் இந்த கட்டுப்பாடுகளை அமல்படுத்தப்பட்டு இபாஸ் முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனால் குறைந்த அளவிலான சுற்றுலா பயணிகள் வரும் நிலையில் வழக்கமான வியாபாரம் இல்லாமல் ‘டல்’ அடிக்கிறது. இந்த சூழலில் கேரளாவில் ஜூன் 1ம் தேதி தென்மேற்கு பருவமழை துவங்கும். அதன் தொடர்ச்சியாக நீலகிரி மாவட்டத்தில் முதல் வாரத்தில் இருந்து துவங்கும். அதற்குள் சீசனும் முடிந்து விடும் என்பதால் பெரிய அளவில் வியாபாரத்தில் பாதிப்பு இருக்காது.

இம்முறை முன்கூட்டியே தென்மேற்கு பருவமழை கடந்த 24ம் தேதியே துவங்கி நீலகிரியில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை கொட்டியது. குறிப்பாக ரெட் அலர்ட் விடுக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பு கருதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் 4 நாட்களுக்கும் மேலாக மூடப்பட்டன.

அண்டை மாநில எல்லையோர மாவட்டங்களிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருவது வெகுவாக குறைந்தது. இதனால் இறுதிக்கட்டத்தில் கோடை சீசன் களையிழந்தது.

இதன் காரணமாக உள்ளூர் வியாபாரிகள், வாடகை வாகனங்கள் வைத்துள்ளவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். இந்த சூழலில் நேற்று மழையின்றி இதமான காலநிலை நிலவிய நிலையில் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் திறக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே உள்ளூர் மக்களின் வாழ்வாதாரமான சுற்றுலா தொழிலை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.




# உலகப் புகையிலை எதிர்ப்பு தினம்

சிவகங்கை, ஜூன்.01-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செக்காலை ரோட்டில் இயங்கி வரும் பிரபல நவரத்னா தங்க மாளிகையின் சார்பாக புகையிலை எதிர்ப்பு துண்டு பிரசுரங்கள் பொதுமக்கள் மத்தியில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியினை காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கோப்பெருந்தேவி மற்றும் காரைக்குடி நவரத்னா கிளையின் நிர்வாக இயக்குனரும், கிளை பொறுப்பாளருமான ஆசிப் அலி துவக்கி வைத்தார்கள். நவரத்னா கிளை மேலாளர் மதன் அனைவரையும் வரவேற்றார். காரைக்குடி நவரத்னா தங்க மாளிகை கிளையிலிருந்து துவங்கிய துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வு வழி நெடுகிலும் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. புகை உடலுக்கு பகை, புகையிலை உயிருக்கு விலை போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஊழியர்கள் கையில் ஏந்தியபடி சென்றனர். நிறைவாக நிகழ்ச்சி பெரியார் சிலை அருகே நிறைவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நவரத்னா கிளை ஊழியர்கள், பொதுமக்கள், சிறுவர் சிறுமியர் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை காரைக்குடி நவரத்னா தங்க மாளிகை நிர்வாகம் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

# கருணாநிதி பிறந்தநாளான ஜூன் 3ல் மின்சார பேருந்து சேவையை முதல்வர் ஸ்டாலின் தொடங்குகிறார்

சென்னை, ஜூன்.01-

சென்னையில் மின்சார பேருந்து சேவையை முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்தநாளான ஜூன் 3ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில், மின்சார பேருந்துகளை இயக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்னை, கோவை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் மின்சார பேருந்துகளை இயக்கும் வகையில் டெண்டர் வெளியிடப்பட்டு, கொள்முதல் செய்யும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பேருந்துகளை தயாரிக்கும் நிறுவனங்களே இவற்றை இயக்கும் வகையில் டெண்டர் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும், பெண்களுக்கு இலவச சேவை வழங்கும் சாதாரண கட்டண பேருந்து, விரைவு பேருந்து, குளிர்சாதன பேருந்து என அனைத்து வகைகளிலும் மின்சார பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் உறுதியளித்துள்ளார். சென்னையை பொருத்தவரை முதல்கட்டமாக 625 மின்சார பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இதற்காக 5 பணிமனைகளில் முற்றிலுமாக மின்சார பேருந்து இயக்கும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்தநாளான ஜூன் 3ம் தேதி 120 பேருந்துகளின் சேவையை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார். இதை தொடர்ந்து, மற்ற முக்கிய நகரங்களுக்கு மின்சார பேருந்து சேவை விரிவுபடுத்தப்பட உள்ளது.



■ சிவகங்கை மாவட்டம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலகத்தினை சிவகங்கை ஆக்ஸ்போர்டு நகர் பகுதியில், வங்கியின் துணை மேலாண் இயக்குநர்கள் முனைவர் அஜய் கே சூத் மற்றும் ஜி எஸ் ராவத் ஆகியோர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து. அந்நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் அனிஷ் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.பிரவீன் குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் ஆர்.ஜெயபிரகாஷ், கிராமிய பயிற்சி மையத்தின் இயக்குநர் திருமதிஅலமேலு, தமிழ்நாடு கிராம வங்கியின் மண்டல மேலாளர் நித்யானந்த் மற்றும் வங்கி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் தலைவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வசந்தம் நகர் பகுதியில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் சார்பில், அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றியினை (Transformer) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக்கழக செயற்பொறியாளர் (பொ) ஜான் எஃப் கென்னடி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.




■ தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

# பட்டுக்கோட்டை அருகே மகிழங்கோட்டை கிராமத்தில் தனியார் பட்டா இடத்தை அபகரிக்க முயலும் கோவில் அறங்காவலர்கள்

தஞ்சை, ஜூன்.01-

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள மகிழங்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் யுவராஜா இவர் சிங்கப்பூர் தொழிலதிபர் இவரது சொந்தம் ஊரான மகிழங் கோட்டையில் இவரது தாய் தந்தை மற்றும் குடும்பத்தார் வசித்து வருகின்றனர் தொழிலாளர் யுவராஜா நேரம்கிடைக்கும் பொழுது சிங்கப்பூரில் இருந்து தனது குடும்பத்தை சொந்த ஊருக்கு வந்து பார்த்துவிட்டு செல்வது வாடிக்கை.இவர் வீடு உட்பட வீட்டைச் சுற்றி 32 சென்ட் இடங்கள் உள்ளது. இந்நிலையில் இவர் வீட்டு அருகே இந்து சமய அறநிலைத்

துறைக்கு சொந்தமான ராஜகோபால சுவாமி திருக்கோயில் உள்ளது கோயிலுக்கு செல்வதற்கு மாற்று பாதை இருந்தாலும் இவரது காலி இடத்தில்



கோயிலுக்கு செல்வது கிராம மக்களுக்கு எளிதாக இருந்ததால் அதை பயன்படுத்தி வந்துள்ளனர். அதனால் யுவராஜா குடும்பத்தார் கோயிலுக்கு வழிபாடு செய்பவர்கள் செல்கிறார்கள் செல்லட்டும் இன்று விட்டு வந்துள்ளனர். இந்நீலையில் கோயில் கும்பாபிஷேகம் முன்னிட்டு யாகசாலை அமைப்பதாக இவர்களது காலி இடத்தில் யாகசாலை கட்டி உள்ளனர்.அதன் பின்பு யாகசாலை கட்டுவதற்கு பொருட்கள் வைக்க வேண்டும் என்று ஒரு கட்டுமானத்தை கட்டியுள்ளனர். கும்பாபிஷேகம் முடிந்த பின்பு அந்த பொருட்கள் வைக்க கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றாமல் நிரந்தரம் ஆக்கிவிட்டனர் சுமார் 13 சென்ட் மேல் கோவில் அறங்காவலர்களான சிவசுப்பிரமணியன், ராமநாராயணசாமி, செந்தில்குமார், ஆகிய மூவரும் செய்துள்ளனர், இவர் பலமுறை இந்து சமய அறநிலை துறைக்கு தனது சொந்த இடத்தை கோவில் அறங்காவலர்கள் அபகரிக்க முயல்வதாக புகார் அளித்தும் இதுவரை இவரது சொந்த இடத்தை பக்தர்கள் கோயிலுக்கு செல்லும் வலியை இவர் மீட்பதற்கு மூவரும் இடையூ றாக உள்ளதாகவும் பொருள்கள் வைக்க கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அகற்றி இவரிடம் ஒப்படைக்காமல் உள்ளதாகவும், அதுமட்டுமல்லாமல் இவர்கள் குடும்பத்துடன் சிங்கப்பூரில் இருந்த பொழுது இவர் வீட்டு அருகே வசிக்கும் செந்தில் என்பவர் சுமார் 5 சென்ட் இடத்தை அபகரித்து வீடு கட்டி உள்ளதாகவும்,இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.யுவராஜா வழக்கு நடுவில் உள்ளது. இந்நிலையில் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் அமைப்பதற்கு யுவராஜா முடிவு செய்து வீட்டுக்கு முன்புறம் சொந்த இடத்தில் வீட்டு முன்பு பக்கம் காம்பவுண்ட் சுவர் தற்போது யுவராஜா கட்டி வருகிறார்.அதற்கும் கோவில் அறங்காவலர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்து இவருக்கு இடையூறு செய்துள்ளனர் அதன் பின்பு தனது கையில் உள்ள ஆவணங்களை எடுத்து காவல் நிலையத்தில் காட்டிய பொழுது காவல்துறையினர் இவர் பட்டா இடத்தில் இவர் காம்பவுண்ட் சுவர் கட்டுவது தெரிந்து கொண்ட பின்பு இவரது இடங்களை ஆக்கிரமிப்பு செய்ய முயலும் அறங்காவலர்களை அறிவுரை கூறி அனுப்பி வைத்துள்ளனர். தனது சொந்த பட்டா இடத்திலேயே தனது குடும்பத்தார் நிம்மதியாக வாழ விடாமல் அறங்காவலர்கள் என்ற போர்வையில் இவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு விடிவு கிடைக்காதா என்று காத்திருக்கிறார்!!!




■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக புகையிலை ஒழிப்பு தின உறுதிமொழியினை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம் தலைமையில் துறை அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் ஏற்றுக்கொண்டனர்.



# திருப்பூரில் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சியர், சுகாதார இணை இயக்குனர் தொடங்கி வைத்தனர்

திருப்பூர், ஜூன்.01-

புகையிலை கட்டுப்பாட்டு மையத்தின் சார்பில் இன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. தலைமையில் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் K.R.ஜெயந்தி முன்னிலையில், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் கொடியசைத்து, செவிலிய மாணவ மாணவிகளை கொண்டு புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. அவிநாசி வட்டார மருத்துவ அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலரின் நேர்முக உதவியாளர், நலக்கல்வியாளர், மருத்துவர்கள், செவிலியர்கள் செவிலியர் கல்லூரி மாணவ மாணவியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், எண்ணம் போல் வாழ்க்கை அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

# தாம்பரம் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

தாம்பரம், ஜூன்.01-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மேற்கு தாம்பரம் கக்கன் தெருவில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் தலைமை வகித்தார், பகுதி கழக செயலாளர் எல்லார் செழியன் ஏற்பாட்டில் நடைபெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லபாண்டியன், அனைத்துலக எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளர் நாவலூர் முத்து ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கூத்தன், ஏ.கோபிநாதன், மாவட்டக் கழகப் பொருளாளர் பி.கே.



பரசுராமன், பொதுக்குழு உறுப்பினர் தா.மு.துரைவேல், பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.தேவேந்திரன், இரா.மோகன், ஜெ.சீனு பாபு, மதுரைப்பாக்கம் எம்.பி.மனோகரன், தலைமைக் கழகப் பேச்சாளர் மூர்த்தி, பகுதி கழக நிர்வாகிகள் கோ.மனோகரன், டி.ஆர்.கெஜா, மாவட்ட அணி செயலாளர்கள் ஜி.எஸ்.புருஷோத்தமன், பா.காசிராஜபாண்டியன், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் ஜி.சங்கர், மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய்கணேஷ் ஸ்டார்பிரபா, மாவட்ட அணி நிர்வாகிகள் முன்னாள் கவுன்சிலர் எம்.வேலு, ஆர்.அமுதா, சி.சுபாஷினி, வட்டச் செயலாளர் ஜேசுராஜ், முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.



# திருமலையில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்: ஆந்திர டிஜிபி அறிவுரை

திருமலை, ஜூன்.01-

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு திருமலையில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என ஆந்திர மாநில டிஜிபி ஹரீஷ்குமார் குப்தா அறிவுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநில டிஜிபி ஹரீஷ்குமார் குப்தா தலைமையில் நேற்று திருமலையில் உள்ள அன்னமைய்யா பவனில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த ஆவண வீடியோவை திருப்பதி எஸ்பியும், தேவஸ்தான பாதுகாப்பு அதிகாரியுமான (பொறுப்பு) ஹர்ஷவர்தன் விளக்கினார்.

அதன்பின்னர், டிஜிபி ஹரீஷ்குமார் குப்தா பேசியதாவது: திருமலை உலக பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். ஆதலால், நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு இங்கு பாதுகாப்பை அதிகரிப்பது அவசியம்.

ஆந்திர போலீஸ் படை, ஆயுதப்படை, சிவில் போலீஸார், ஊர்காவல் படை, தேவஸ்தான கண்காணிப்பு படை, ஆக்டோபஸ் கமாண்டோக்கள் இருந்தாலும், அத்தியாவசிய சூழ்நிலையில் அதனை எதிர்கொள்ள தேசிய, மற்றும் மாநில பேரிடர் மீட்பு குழுவினரும் இருத்தல் அவசியம். திருமலையில் 24 மணி நேரமும் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனங்களை 3 அடுக்கு சோதனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அலிபிரி சோதனை சாவடியில் ராணுவத்துடன் இணைந்து சோதனை செய்யும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

நூதன தொழில்நுட்ப முறையில் வாகன சோதனை இருக்க வேண்டும். வாகனம் முழுவதும் ஸ்கேன் ஆகும்படியான உபகரணங்கள் இதற்காக உபயோகப்படுத்த வேண்டும். சைபர் குற்றங்களுக்காக தனிப்படை அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு ஹரீஷ்குமார் குப்தா பேசினார்.

தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமள ராவ் கூறுகையில், "ஒருங்கிணைந்த பாதுகாப்பு கமிட்டி அமைப்பது, சைபர் குற்றங்களை தடுக்க தனி கமிட்டி அமைப்பது உள்ளிட்டவை விரைவில் அமல் படுத்தப்படும்" என்றார்.

இக்கூட்டத்தில் கூடுதல் டிஜி (சட்டம்ஒழுங்கு) சுதாகர் ரெட்டி, கூடுதல் டிஜி (இண்டெலிஜென்ஸ்) மஹேஷ் சந்திரா லட்டா, டிஐஜி அனந்தபூர் சியாமஷ், திருப்பதி மாவட்ட வனத்துறை அதிகாரி விவேக் ஆனந்த் உட்பட பலர் பங்கேற்றனர்.

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது

பம்மல், ஜூன்.01-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பம்மல் எல்.சி. மஹால் திருமண மண்டபத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே. வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில். குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை



அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநக ராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பல்லவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் லி.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பி.எஸ்.ரவி, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் வாக்குச் சாவடி பாக பணிக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 31 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும், ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா , ஜூன் 18 முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கழக அரசின் நான்கு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் , மற்றும் கழக வளர்ச்சி பணி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பிஎல்ஏ2, பிஎல்சி, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# இரண்டு இருச்சக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

சிவகங்கை, ஜூன்.01-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அண்ணா சிலை அருகே வைகை ஆற்று மேம்பாலத்தில் இரண்டு இருச்சக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது இதில் TN58 AP 2217 என்ற பதிவு எண் கொண்ட புல்லட் வாகனத்தில் மானாமதுரை காந்தி நகரைச் சேர்ந்த ராமச்சந்திரன் (40) என்பவர் அண்ணா சிலையிலிருந்து தேவர் சிலையை நோக்கி சென்று கொண்டிருந்தபோது ஆட்டோவை முந்தி சென்றபோது எதிர் திசையில் வந்த மேலநெட்டூர் கிராமத்தை சேர்ந்த சந்திரசேகர மகன் பிரகாஷ் (19) மற்றும் அவருடன் பயணித்த மாணிக்கம் மகன் மூர்த்தி (22) பயணித்த பல்சர் TN63BP3777 வாகனத்தில் மோதியதில் மூவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது இதில் ராமச்சந்திரன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மற்ற இருவருக்கும் தீவிர காயம் ஏற்பட்ட நிலையில் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து மானாமதுரை காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இருசக்கர வாகனத்தை இயக்கிய இரண்டு நபர்களுமே தலையில் தலைக்கவசம் அணியாமல் சென்றது இந்த விபத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது



# பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல்லில் ரூ.1 கோடிக்கு ஆடுகள் விற்பனை

திண்டுக்கல், ஜூன்.01-

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல் அடுத்த கோபால்பட்டி வாரச்சந்தையில் ரூ.1 கோடிக்கு ஆடுகள் விற்பனையானது.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகேயுள்ள கோபால்பட்டியில் வாரந்தோறும் சனிக்கிழமை வாரச்சந்தை நடைபெறுவது வழக்கம். தற்போது மாவட்டம் முழுவதும் கிராமப்புறங்களில் உள்ள கோயில்களில் வைகாசி திருவிழா நடைபெற்று வருகிறது. விழாவில் நேர்த்திக்கடன் செலுத்தவும், திருமணம், காதணி விழா உள்ளிட்ட விசேஷங்களில் அசைவ விருந்து அளிப்பதற்காகவும், ஜூன் 7ம் தேதி பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு இன்று (மே 31) வாரச்சந்தையில் வழக்கத்தை விட ஆடுகள் விற்பனை 2 மடங்கு கூடுதலாக விற்பனையாது.

ஆடுகள் வாங்கவும், விற்பனை செய்யவும் திண்டுக்கல், நத்தம், கோசுகுறிச்சி, அய்யலூர் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து காலை முதலே வியாபாரிகள், மக்கள் அதிகளவில் வந்திருந்தனர். எடைக்கு ஏற்றவாறு ஒரு ஆடு குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரம் முதல் அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரை விற்பனையானது. ஒரு நாள் மட்டும் ரூ.1 கோடிக்கு மேல் ஆடுகள் விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.



■ கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட லோட்டஸ் நகர் பகுதியில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் சார்பில், அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றியினை (Transformer) இன்று (30.05.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக்கழக செயற்பொறியாளர் (பொ) ஜான் எஃப் கென்னடி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



# பழனியில் கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கும் விழா

பழனி, ஜூன்.01-

பழனி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞரின் கனவு இல்ல கெட்டபயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கும் விழா சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. விழாவில் கணக்கன்பட்டி கோம்பை பட்டி ஆண்டிபட்டி கலையம் புத்தூர் தாமரைக் குளம் பாப்பம்பட்டி உள்ளிட்ட 17 ஊராட்சியில் 198 பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணி ஆணையை சட்டமன்ற உறுப்பினர் ஐபி செந்தில் குமார் வழங்கினார். விரைவில் சில சில தினங்களுக்குள் மேலும் 163 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட பணி ஆணை வழங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1700 குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன் அடைந்துள்ளதாகவும் மாவட்ட முழுவதும் 10,000 மேற்பட்டோர் கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் மூலம் வீடு கட்டி பயன் அடைந்துள்ளனர் என சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார். பின்னர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி ஒன்றிய செயலாளர் சௌந்தர பாண்டியன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புதிய பயண அட்டை வழங்கப்படும்வரை மாணவர்கள் பழைய பாஸ் மூலம் அரசு பேருந்தில் பயணிக்க அனுமதி

சென்னை, ஜூன்.01-

புதிய இலவச பயண அட்டை வழங்கப்படும் வரை பள்ளி, கல்லூரி, பாலிடெக்னிக், ஐடிஐ மாணவர்கள் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பயண அட்டையை பயன்படுத்தி அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய போக்குவரத்துத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் போக்குவரத்துறை செயலர் நேற்று வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் ஜூன் 2ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. அதைத்தொடர்ந்து அரசு கலை, அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐடிஐக்கள் திறக்கப்பட உள்ளன.

இதையொட்டி, 2025 -26 கல்வி ஆண்டில் மாணவர்களுக்கான கட்டணமில்லா புதிய பேருந்து பயண அட்டை கல்வி பயிலும் பள்ளி மற்றும் கல்லூரியிலேயே இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்யும் வகையில்



அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

அதற்கான காலஅளவை கருத்தில்கொண்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களால் 2024 25 கல்வி ஆண்டுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட பயண அட்டை மற்றும் பள்ளிகளில் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை நடத்துநரிடம் காண்பித்து தங்கள் இருப்பிடத்திலிருந்து தாங்கள் படிக்கும் பள்ளி வரை சென்று வரலாம்.

அதேபோல், அரசு கலை, அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் ஐடிஐ மாணவ, மாணவிகள் 2024-25 கல்வி ஆண்டில் வழங்கப்பட்ட கட்டணமில்லா பேருந்து பயண அட்டை அல்லது தங்களது கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை நடத்துநரிடம் காண்பித்து கட்டணமின்றி பயணிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

பள்ளி தொடங்கும் மற்றும் முடியும் நேரம் வரை பேருந்துகள் சரியாக இயங்குவதை கண்காணிக்க அலுவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், உரிய நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக ஏற்றிச்செல்லவும், மாலையில் இறக்கிவிட்டு செல்லவும் அனைத்து அரசு போக்குவரத்துக் கழக நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கும் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161